ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2113/8 - 2019 මාර්තු මස 05 වැනි අඟහරුවාදා - 2019.03.05

*2113/8 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. : 03/2019*

**உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வைன் மீதான மதுவரித் தீர்வை**

*காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில்-*

*(1) 18% இற்கும் குறைவான மதுசார செறிவுடன் கூடிய உள்நாட்டு தாவரப் பொருட்கள் அல்லது தாவர உற்பத்திகள் அல்லது உள்நாட்டில் நுகரத்தக்க பால்களிலிருந்து காய்ச்சி வடித்தல் செயற்பாடல்லாது பதப்படுத்தல் மூலம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானங்களுக்காக அவற்றின் மதுசார செறிவு லீற்றர் ஒவ்வொன்றுக்குமாக ரூபா அறுநூறு (ரூபா 600.00) என்ற விகிதத்தில் மதுவரியொன்று அறவிடப்படுதல் வேண்டுமென்பதோடு, மேலே குறிப்பிடப்பட்ட மதுபானம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகையில் அதன் தொகையளவு எவ்வளவாக இருப்பினும் அதற்காக மதுவரி அறவிடப்படாதிருத்தல் வேண்டுமெனவும்,*

1A - PG 4416 — 592 (2019/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) 2011, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/4 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 946 இரத்துச் செய்யப்படுகிறது எனவும்

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

மங்கள சமரவீர,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2019, மாச்சு 05.

03-1071